பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அதி நவீன!
● ஒஸ்லஸ் கோப் ●
கொண்டு
ரீவி, டெக், றேடியோ
என்பன சிறந்த முறையில்
திருத்திக் கொடுக்கப்படும்.
எலெக்ரோ
றெவ்-கூல்
எஞ்சினியர்
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.
(6597)

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2/-

குளிர்சாதனப் பெட்டிகள்
குளிரூட்டிகள்
திருத்திக் கொள்ளவும்
பாடல்களை ஸ்ரீரியோ
முறையில் பதிவு
செய்து கொள்ளவும்
எலெக்ரோ
றெவ்-கூல்
எஞ்சினியர்
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.
(6597)

கூர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடு புரட்டாதி மீ 13 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 17 (29 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர் 196

## இன்று இடைத்தேர்தல்

கொழும்பு, செப் 29

வெலிமடைப் போர்தான தொகுதியின் இடைத்தேர்தல் இன்று நடைபெறுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் மற்றும் 3 சுயேச்சை வேட்பாளர்கள் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். (ஓ-எ)

## நல்லூரில் நேற்றுச்சோதனை

யாழ்ப்பாணம் செப் 29

நல்லூரில் இந்திய அமைதிப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் நேற்று தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

பருத்தித்துறை வீதியாச் சென்ற அனைத்து வாகனங்களும் அரசடிச் சந்தியிலும், நல்லூர் பின் வீதியிலும் வைத்து படையினரால் பலத்த சோதனையிடப்பட்டன.

வாகனங்களில் வந்த பயணிகள் அனைவரும் கீழே இறக்கப்பட்டு உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

"தியாக தீப தூபி" திரை நீக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு சமீபமாகவே இச் சோதனைகள் இடம்பெற்றன. (ஓ-க-10)

## பஸ் விபத்தில் 30பயணிகள்பலி

புதுடில்லி, செப் 29

ஜம்மு பகுதியில் இடம் பெற்ற அரசு பஸ் விபத்து ஒன்றில் 30 பயணிகள் உயிரிழந்தனர். (ஓ-எ)

## வயிற்றோட்டம் மூவர் பலி

யாழ்ப்பாணம் செப் 29

வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்ட மூவர் இரணைதீவுப்பகுதியில் மரணமாகியுள்ளனர்.

மேலும் 12பேர் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்நோய் தற்பொழுது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும்- மேலும் பரவாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் வைத்திய அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடிச்சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவ உதவிகளும் இரணைதீவுப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஓ-ஐ-10)

## ஏவுகணைத் தாக்குதலில் 35 பேர் மரணம்

காபூல், செப் 29

ஆப்கன் தலைநகர் காபூலில் கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 35 பேர் மரணமடைந்தனர். 160 பேர் காயமடைந்தனர்-

21 ஏவுகணைகளை காபூல் நகரின் நடுப்பகுதியை நோக்கி கிளர்ச்சிக்காரர்கள் ஏவினர் என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (ஓ-எ)

# தமிழர் பிரச்சினை குறித்து சிறிமாவோ மௌனம்!

## தேர்தல் அறிக்கையில் குறிப்பாக எதும் சொல்லாமல் பூசி மெழுகல்!!

### வடக்கு கிழக்கு பிரிந்துவிட்டதாக நஞ்சு பாய்ச்சல்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 29

**நாட்டின் முக்கிய விவகாரமான தமிழர் பிரச்சினை குறித்து, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பிரதமரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மௌனம் சாதித்திருக்கிறார்.**

**ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கை, தமிழர் பிரச்சினை குறித்து குறிப்பாக எதுவும் கூறாமல், பொதுவாகப் பூசிமெழுகும் பாணியில் அமைந்துள்ளது.**

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, வாக்காளருக்கான தனது அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து குறிப்பான, திட்டவட்டமான அறிவிப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் குழப்ப நிலையை ஒழித்துக் கட்டுதல் தேசிய ஒற்றுமையை மீண்டும் கட்டி எழுப்புதல் போன்ற பொதுவான வாசகங்கள் காணப்படுகின்றனவே அன்றி தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாகக் குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை.

ஆனால் வடக்கு, கிழக்கில் இந்தியத் துருப்புகள் நடந்து கொள்ளும் விதம் குறித்து அதில் கண்டிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அந்த அறிக்கைப் பிரசுரத்தில் இரண்டு இலங்கைப் படங்கள் வரையப்பட்டுள்ளன.

ஒன்று 1977 இல் இருந்த இலங்கை அது ஒரே இலங்கையாக

(6 ஆம் பக்கம் பார்க்க

# தம்மைத் தாமே ஆளும் நிலை, வருவரை தமிழர் பிரச்சினை தீராது

### தூபி திறப்பு விழாவில சி. வீ. கே, பேச்சு

— அலுவலகச் செய்தியாளர்: சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், செப், 29

தமிழர்கள் தம்மைத் தாமே பிறர் தலையீடின்றி, ஆளும் நிலை வரும் வரை தமிழர்களுக்கு உரிய பிரச்சினைகள் தீர மாட்டா.

இவ்வாறு யாழ் மாநகராளுமன்ற ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

நல்லூரில் நேற்று, தியாகி திலீபனின் நினைவாக, "தியாக தீப தூபி" திறந்து வைக்கப்பட்டது அங்கு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆணையாளர் தமது பேச்சில் தெரிவித்ததாவது:-

தமிழ் இளைஞர்கள் கல்வியில் தரப்படுத்தலையும் முக்கிய அம்சங்களில் ஒன்றாக முன்வைத்தே போராடத் தொடங்கினர்.

அந்தக் கல்விக்காகவே தியாகி திலீபனின் உடலைக் கையளித்த ஓராண்டு தினம் இன்றாகும். அதன் காரணமாகவே இன்று இந்தத் தூபியை திரை நீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

திலீபன உண்ணாவிரதம் இருந்த முதல்நாளே யாழ்ப்பாணத்துக்கு வந்து பேச்சு நடத்தும்படி இந்தியத் தூதுவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் நேற்று தியாக தீப தூபி திறப்பு

யாழ்ப்பாணம் செப் 29

தியாகி திலீபனின் நினைவாக நிறுவப்பட்ட "தியாக தீப தூபி" நேற்றுப்பிற்பகல் 4.50 மணியளவில் நல்லூர் புதிய பருத்தித்துறை வீதி (இந்து விடுதிக்கு பின்புறமாக) திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் ஜொனியின் தந்தை திரு. வி. எஸ். விக்னேஸ்வரன் தூபியில் பதிக்கப்பட்டிருந்த ஞாபகார்த்த பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார்.

தியாகி திலீபனின் தந்தை திரு. இராசையா தூபியில் பொருத்தப்பட்டிருந்த மின்சார விளக்கை ஏற்றி வைத்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வண பிதா ஆர். ஜோசப், மௌலவி சதக்கத்துல்லா ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

திரு. விக்னேஸ்வரன், திரு. இராசையா, யாழ் மாநகர ஆணையாளர் சி. வீ. கே. சிவஞானம் ஆகியோர் உரையாற்றினர். (ஓ-க)

## முச்சந்தி முரளி



ஒண்டும் சொல்லாமல் இருந்தால் தருணத்துக்கு ஏத்தமாதிரி தமிழர் பிரச்சினையையே தேர்தல் காயாகப் பாவிக்கலாம் எண்டு அம்மையார் நினைச்சிருப்பார்...! யாருக்குத் தெரியும்..!!

சுபநேரம்

வியாழக்கிழமை

சுபநேரம்:

07 32முதல் 09.02வரை

ராகுகாலம்:

01 32முதல் 03 02வரை

சார்த்திரை விரதம்

# வடபகுதிக்கு

## 6 அம்புலன்ஸ்கள்; 10 ஜீப்கள்

### அக்டோபர் நடுப்பகுதியில்வந்துசேரும்

யாழ்ப்பாணம், செப்,29

வட மாகாணத்துக்குப் புதிதாக ஆறு அம்புலன்ஸ் வண்டிகளும் பத்து ஜீப் வண்டிகளும் கிடைக்க இருக்கின்றன

பிரஸ்தாபவாகனங்கள் தற்போது கொழும்பு வந்து சேர்ந்துள்ளன. எதிர்வரும் மாதம் நடுப்பகுதியில் இவை வட மாகாணத்துக்கு வழங்கப்படும்.

வடமாகாணத்தின் சுகாதாரச் சேவைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்த அம்புலன்ஸ் வண்டிகளும் வழங்கப்பட இருக்கின்றன.

யாழ்ப்பாணத்துக்கு நான்கு அம்புலன்ஸ் வண்டிகளும். வவுனியாவுக்கு இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளும் என்ற அடிப்படையில் இந்த ஆறு அம்புலன்ஸ் வண்டிகளும் பகிர்ந்தளிக்கப்படும்.

யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவுள்ள நான்கு வண்டிகளும் முறையே பருத்தித்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, மனை ஆகிய பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு தலா ஒன்று வீதம் என்ற ரீதியில வழங்கப்படும். (ஓ-ஐ-10)

## பிரேந்திரா—ஜே. ஆர். கட்டுநாயக்காவில் பேச்சு

கொழும்பு, செப் 29

நேபாள மன்னர் பிரேந்திரா நேற்று நண்பகல் 1 45 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அவரது பாரியார் ஐஸ்வரியாவும் மற்றும் அதிகாரிகளும் அவருடன் கூட வந்திருந்தனர்.

புடைவைக் கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் விமான நிலையத்தில் அவர்களை வரவேற்றார்

விமான நிலைய பிரமுகர்கள் மண்டபத்திற்கு அவர் அழைத்துச் செல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மதுரை வங்கிக்கொள்ளை: புலிகளுக்கு சம்பந்தமில்லை

### காவல்துறை அதிகாரி தகவல்

மதுரை, செப் 29

மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற மிகப் பெரும் வங்கிக் கொள்ளைச் சம்பவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை

இவ்வாறு இக்கொள்ளை தொடர்பாக புலனாய்வில் ஈடுபட்ட காவல் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இந்தக் கொள்ளைச் சம்பவத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தொடர்பு படுத்தி முன்னர் தமிழக நாளேடுகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

தற்போது இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிலரை தமிழக பொலீஸார் கைது செய்திருக்கின்றனர். கொள்ளையிடப்பட்ட நகைகளில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டிருக்கிறது.

எனினும் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கருணாகரன் என்பவரும் மேலும் ஏழு பேரும் இன்னும் தேடப்பட்டுவருகிறார்கள்.

சில இலங்கைத் தமிழர்களும், மதுரை முன்னாள் மேயர் முத்துவின் மகன் நல்ல தம்பியும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்துக்கு

## மேலும் 35 தொலைபேசி லைன்கள்

யாழ்-கொழும்பு நேரடித் தொலைபேசித் திட்டத்தின் கீழ் மேலும் முப்பத்தைந்து தொலைபேசி "லைன்கள்" யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கென தொலைத்தொடர்புத் திணைக்கள பொறியியலாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

தொலைபேசி இணைப்புகள் யவம் அநுராதபுரத்தில் உள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தினூடாகச் செயற்படுத்தப்படும்

இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

புதிதாக வழங்கப்படவிருக்கும் தொலைபேசி இணைப்புக்களில் பெரும் பாலானவை தபாற் கந்தோர்களுக்கு வழங்கப்படும் என அறியவருகிறது.

தபால் நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டதும் யாழ் பிராந்தியத்தில் வழமையான தந்திச் சேவைகள் நடத்தக் கூடியதாக இருக்கும் என தபாற் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார். (ஓ-ஐ-10)

## ஜெயலலிதா மீது வழக்கு?

சென்னை, செப்.29

பொது மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட எண்பது லட்சம் ரூபா [இந்தியப் பணத்தில் எங்கே? என்று கேட்டு ஜெயலலிதா மீது வழக்குத் தொடருவது என்று நாவலர் நெடுஞ்செழியன் தலைமையிலான நால்வர் அணி அ. தி. மு. க. தீர்மானித்துள்ளது.

நெடுஞ்செழியன் தலைமையில அ. தி. மு. க. நால்வர் அணி பொதுக்குழுக் கூட்டம் நடந்தது.

அப்போது இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. [ஓ-எ-4]

### அவதூறு மசோதாவின் எதிரொலி:

## அமைச்சர் சிதம்பரத்தின் இலாகா பறிபோனது!

புதுடில்லி, செப் 29

பத்திரிகை அவதூறு மசோதா வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, உள்துறை இணை அமைச்சர் ப சிதம்பரத்திடம் இருந்து முக்கிய இலாகா ஒன்று அவரிடமிருந்து பறிக்கப்பட்டது.

உள் நாட்டுப் பாதுகாப்பு, அரச ஊழியர், பொது முறையீடு, ஓய்வு ஊதியம் யூனியன் பிரதேசங்களுக்கான ஐ ஏ எஸ் அதிகாரிகள் நியமனம், மாறுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய இலாகா திரு. சிதம்பரத்திடம் இருந்து எடுக்கப்பட்டு இன்னொரு உள்துறை இணை அமைச்சரான சந்தோஷ் மோகன்தேவிடம் கொடுக்கப்பட்டுள்ளது

அவதூறு மசோதாவை இணை அமைச்சர் ப சிதம்பரமே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்

அதற்குஎழுந்தபலத்த எதிர்ப்பின்எதிரொலியே இந்த இலாகா பறிப்பு என்று புதுடில்லி வட்டாரங்களில தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ 4)

## ரஷ்யாவுக்கு நேற்றும் 3தங்கப்பதக்கங்கள்

சோல், செப், 29

சோல் ஒலிம்பிக் போட்டியில் நேற்று ரஷ்யா 3 தங்கப்பதக்கங்களைத் தட்டிக் கொண்டது.

மேற்கு ஜேர்மனி குதிரை ஏற்றப் போட்டிகளில் 2 தங்கப்பதக்கங்களை பெற்றது.

200 மீட்டர் நீச்சல் பந்தயத்திலும் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும் அமெரிக்கா இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்றது.

இதேவேளை நேற்று வரை ரஷ்யா 36 தங்கப் பதக்கங்களையும் கி. ஜேர்மனி 29 தங்கப்பதக்கங்களையும் அமெரிக்கா 19 தங்கப்பதக்கங்களையும் பெற்றிருந்தன (ஓ-எ)

# வடக்கு-கிழக்கு இணைப்பை இல்லாமல் ஆக்குவதற்கு விரைவில்

### சர்வசனவாக்கெடுப்பு நடத்துவேன்-பிரேமதாஸ

ஹொங்கொங்,செப் 29

வடக்கு, கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைத்துள்ளோம் அது நிரந்தரமாக இணையக்கூடாது என்பது எனது விருப்பம்.

வடக்கு, கிழக்கு இணைப்பை இல்லாமற் செய்வதற்குக் கிழக்கு மாகாண மக்களுக்கு விரைவில் சந்தர்ப்பம் வழங்க நான் ஜனாதிபதியானால் நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு பிரதமர் திரு ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

சீனாவிலிருந்து லண்டன் திரும்பும் வழியில் ஹொங்கொங்கில் வைத்து அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்

ஹொங்கொங் வாழ் இலங்கையர் அளித்த வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு கிழக்கில் அநேகமான பேராளிகள் ஒழுங்கான அரசியல் நீரோட்டத்தில இணைந்து விட்டனர்.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அரசியல் நீரோட்டத்தில் கலக்க இன்னும் இணங்கவில்லை. அவர்களும் நாட்டு அரசியலின் பிரதான நீரோட்டத்தில் கலக்க வேண்டும் என்பதே எனது விருப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட Honda C 50, C 90 விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க: வ. தேவராஜா, 15, 3 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (6839)

---

சீமெந்துத் தொழிற்சாலையின் தெற்கு எல்லைக்கு அண்மையில் ''வளவுடை'' என்னும் 10 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. மாவிட்டபுரம் கீரிமலை வீதிக்கு வடக்குப் பக்கமாக உள்ளது. தொடர்புக்கு முகவரி: இ. நடேசு, மாரியம்மன் கோயில் ஒழுங்கை, மாவிட்டபுரம் (C/313)

---

மிக மலிவான விலையில் நிலையுடன் சடைக்கதவு வீட்டுக்குத் தேவையான கதவுநிலை, யன்னல்கள், காட்டுத்தடி கம்பிக் கட்டை, முட்டுத்தடி யாவும் விற்கப்படும் விபரங்களுக்கு: லக்ஷ்மி ஸ்றோஸ், மார்டீன் றோட், யாழ்ப்பாணம். (6792)

---

சிறிது காலம் பாவித்த டீப்பிறீசர் (Deepfreezer) விற்பனைக்கு உண்டு. அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 118, ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கி முன்பாக) யாழ்ப்பாணம். (6855)

---

சிங்கப்பூரில் இருந்து கொண்டுவரப்பட்ட கிளாஸ் வகைகள், சில்வர் பொருள்கள் Bamix சேக்மிக்சர், சுவர்மணிக்கூடு மற்றும் பல பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. 167, ஆஸ்பத்திரி வீதி. (சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக) யாழ்ப்பாணம். (6854)

---

பாவித்த வீட்டுத் தளபாடங்கள். கண்ணாடி அலுமாரி, Showcase, அலுமாரி, கட்டில், மேசை, Oven, சாப்பாட்டு மேசை, கண்ணாடி மேசை மற்றும் பல வீட்டுப் பொருள்களும் உடன் விற்பனைக்குண்டு. 167, Hospital Rd, (சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக) யாழ்ப்பாணம். (6836)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு வாரத்திற்கு முன்னர் முழுப்பணமும் செலுத்தி 100 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு கீழ் வரும்விலைகளில் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும். பிறவுண்சேவல் குஞ்சு 3 00, கறுப்பு சேவல் குஞ்சு 6. 75. சற்குணராஜா & பிறதர் பிரம்படி லேன், கொக்குவில். (6761)

### தாரா, கோழிக்குஞ்சு விநியோகம்

''கைலேன்'' கறுப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகளும், 'செட்ஞ பாம்' சேவற்குஞ்சுகளும், புறேயிலர்க் குஞ்சுகளும் நல்ல இன கறுப்பு, வெள்ளை தாராக் குஞ்சுகளும் 30/9, 7/10 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். A. J. S. பாம், 45, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம், லீலாபதி, கண்டி வீதி மிருசுவில். (6835)

### இறைச்சிக்கோழி

புறெயிலர் இறைச்சிக் கோழி, விருத்து, சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (6786)

### கோழிக்குஞ்சு விநியோகம்

மூன்றுமாத Golden Comet பேட்டுக் கோழி 1ஆம் திகதி சனிக்கிழமை விநியோகிக்கப்படும். விலை 65/- முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (6785)

---

அதி சலுகை விலையில் ஒருநாள் கோழிக்குஞ்சான லோமன், கைலைன கோல்டன் கொமற், சிவப்பு மற்றும் பலஇன பேடு சேவல், புறெயிலர்கள் அனைத்தும் 1. கலேசா மாஸ்கடை, ஆனைக்குட்டி மதவடி, தெல்லிப்பழை. 2 செல்வசண்முகா மாஸ்கடை, சுன்னாகம், 3. மணிமுச் சுல்பார், துரை வீதி சந்தி, இணுவில். 4. லக்சுமி ஸ்ரோர்ஸ், கொக்குவில் சந்தியில் பெற்றுக் கொள்ளலாம். 100க்கு மேலும் ஓடர் செய்து பெறுபவர்களுக்கு விசேஷ சலுகை. (6794)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரவ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. இல. 54, விதானையார் வீதி, சுண்டுக்குளி. யாழ்ப்பாணம் (6838)

### கார் விற்பனை

Fiat Car 132(S) உடன் விற்பனைக்கு உண்டு. சனிக்கிழமைக்கு முன்பு நேரில் தொடர்பு கொள்ளவும். No. 22/2 Vidance Lane, Chunduk kuli (C/316)

### வீடு வாடகைக்குத் தேவை

ஒரு சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட தனி வீடு ஒன்று யாழ். மாநகர சபை எல்லையினுள்ளோ அல்லது அதற்கு அண்மையிலுள்ள பகுதியிலோ உடன் தேவை. தொடர்பு: இல. 378, உதயன், யாழ்ப்பாணம். (6795)

### தேவை

பில் கிளாக், ஸ்ரோர் கீப்பர் உடன் தேவை. ஆங்கில அறிவும் தட்டச்சு அனுபவமும், மேலதிக தகைமை. நேரில் வரவும் Ganga Enterprises 358, K.K.S Road, Jaffna (C/ 317)

### கந்தபுராணம் பிரதி தேவை

கந்தபுராணம்- யுத்த காண்டம் முதலாம், இரண்டாம் பாகங்கள்- உரையாசிரியர் நவாலியூர் ஐ. நல்லையா- பிற நாடு செல்லும் சைவ அன்பரொருவருக்கு சமயப் பிரசாரத்திற்காகத் தேவை. எனவே இப் பிரதிகளை விலைக்கு விற்க முன்வருவோர் உடன் தொடர்பு கொள்வார்களாக. கா. இரகுநாதன், 5½, அம்பாள் வீதி நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (6856)

### மணமகன் தேவை

29 வயது செவ்வாய்க் குற்றமுள்ள அழகிய விஸ்வகர்ம பெண்ணிற்கு உத்தியோகம் பார்க்கும் வரன் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு சீதனம் கொடுக்கப்படும். மற்றவை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: 197, C/o, உதயன். (6847)

### MATRIMONIAL

Variety of Horoscopes Brides and Bridegrooms- Available with Full Particulars - Details Arrangements Guaranteed call over after [2 p m] on week days week ends from morning at 14, Vidans Lane, Colombuthurai West, Thiruvilangam. (6791)

### A/L இரசாயனம்

108, Brown Road A/L 89, இரசாயனம் ஆசிரியர் சதீஸ். ஒரு வருட சனி, ஞாயிறு வகுப்பு (பிரிவு II) ஆரம்பம் (1- 10- 1988) சனி 4-00P-m சனி, ஞாயிறு (4 P m - 6 P m) 4 - 5 பௌதிக இரசாயனம் 5 - 6. 15 Basic Chemistry பிரிவு I திங்கள், செவ், புதன், வியா, வெள்ளி ஆரம்பமாகிவிட்டது. (6787)

### வலம்புரிச்சங்கு

இல்லங்களில் இலட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூஜை ஆராதனைகளுக்கும் உகந்த சிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்கு உண்டு. ஆகச் சிறியதன் விலை ரூ. 100/- தொடர்பு கொள்ளவும்; தாஸ் 188, புதுச்செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13. (6790)

---

# பிறந்த நாள் வாழ்த்து



## ☆ செல்வப் புதல்வி ஜசிந்தா ☆
(சிந்து)

வட்டு-மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சதானந்தசிவம் தம்பதிகளின்

**செல்வப் புதல்வி ஜசிந்தா (சிந்து)**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மாமன்மார், அத்தைமார், மைத்துனர்மார் மற்றும் அனைவரும் எல்லாம் வல்ல அம்மன் அருள் பெற்று பல கலைகளையும் கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(C-92)

---

## கோப்பாயில் திலீபன் வீதி

கோப்பாய், செப் 29

கோப்பாயில் வீதி ஒன்றுக்கு திலீபன் வீதி என்று பெயர் சூட்டப்பட்டு பெயர்ப் பலகையும் திரை நீக்கம் செய்யப்பட்டது. (இ-72)

---

வெளிவந்து விட்டது!

G. C. E (A/L) ✶ விலங்கியல்

✶ மீன் வளர்ப்பு ✶

ஆக்கியோன்:

**R. ஈசன் B. Sc (cey)**

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [C/319]

---

## நேற்றைய எமது புதிய வெளியீடுகள்

1) ✶ விசு ✶ மோகன் ✶ ரேகா
''மாப்பிள்ளை சார்''
(Original)


2) STRIKE COMMANDO -2
—WAR FILM—

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C-321)

---

# முதலாம் ஆண்டு நினைவு



## த. மணிவண்ணன்
(கண்ணன்)

உதித்தது: 22- 12- 1959
அடிசேர்ந்தது: 11- 10- 1987

திதி: 29- 9- 1988

(இராமர் மாளிகை உரிமையாளர்)

உன் நிழல் பிரிந்து ஓராண்டு ஆனதோ
உன் குழல் இசைகேட்டு உளம் குளிரக்
காத்திருந்தோம்
கான இசையில் களித்திடுவோம்
நாங்கள் என்று
காத்திருந்து களைத்தானோ
கார்மேக வண்ணன்
நேசக் கரம் நீட்டி நித்தம் எம்மை
அணைத்த பாசக் குணக் குன்றே
பாவியாய் நாமிருக்க நீ பரந்தாமன்
அடி சேர்ந்தாயோ
வேகும் தாயின் இதய வேதனையை
நீ அறியாய்
ஓராண்டு காலமது உருண்டோடி
விட்டாலும்
ஆறாத வடுவொன்று அன்பார்ந்த
உள்ளங்களில்
மாறாது இம் மண் மீது எங்கள் உயிர்
மறையும் வரை

உனது ஆத்மசாந்திக்காக அமரத்துவமெய்திய திதியில் இல்லத்திலும் 11 10-88 திகதியில் துர்க்கா தேவியின் ஆலயத்திலும் மகேஸ்வர பூஜை செய்து பிரார்த்திக்கின்றோம்.

தினம் உன் பிரிவை எண்ணி வருந்தும்
அம்மா, ஐயா, தம்பிமார்,
அம்மம்மா, உற்றார், உறவினர்

151, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (6816)

---

# Patrician Institute

## தொழிநுட்ப பயிற்சி நெறிகள் ஆரம்பம்

**1. Diploma in Computer Programming**
**Lectures by Mr. SUNDRARAJAH**
M. C. S. (Member of Computer Society),
B. Sc. (Eng.) Hons (U. K.) A. M. I. C. E.

**Lectures in A. C. Room,**
**Practical on LASER XT, AT, 386** (I.B.m. Compatable),
**Commodore and APPLE II Computers.**

Weekend Courses — 08-10-88இல் ஆரம்பம்
Weekdays Courses (தொழில் புரிவோரின் நலன்கருதி கிழமை நாட்களில் காலை 7-00 மணிக்கு நடைபெறும்.)
10 - 10 - 88இல் ஆரம்பம்
(ஒரு பிரிவில் 15 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர்)

**2.** City and Guilds of London Institute
**"Quantity Surveying"**
PART I (6 மாதம்) PART II (6 மாதம்)

**Lectures by Mr. C. DURAIRAJAH**
(க. பொ. த. சா/த] பரீட்சையில் ஆங்கிலத்திலும், கணிதத்திலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

**3. Draftsmanship** (கட்டடப் படம் வரைதல்)
(6 மாத கால பயிற்சி)

**4. Motor Mechanism** (மோட்டார் மெக்கானிசம்)
(6 மாதம்) (Tamil Medium, &English Medium)

**5. Electrical Wiring** (வீட்டு மின் இணைப்பு)
(3 மாதம்)

**6. Motor Rewinding** (மோட்டார் றீவைன்டிங்)
(6 மாதம்)

மேற்படி பயிற்சி நெறிகள்
**3 - 10 - 88 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.**

மேற்கண்ட பாடநெறிகளுக்கு அதிகளவு செய்முறை அறிமுறைப் பயிற்சி கொடுக்கப்பட இருப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவரே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்
விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு :
கலவரங்களால் பாதிக்கப்பட்ட அல்லது பயிற்சிக்கான முழுக் கட்டணமும் செலுத்த இயலாதவர்களுக்கு பங்குத்தந்தையின் சிபார்சின் பேரில் அவர்களுக்குச் சலுகைக் கட்டண வசதி அளிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு :

REGISTRAR,
Patrician Institute of Higher Studies,
59, St. Patrick's Road,
JAFFNA.

(C/315)

---

# 6 ஆம் மாத நினைவஞ்சலி

அன்னைமடியில்: 1960 - 5 - 15



மண்ணில்: 1988 - 5 - 29

## திரு. வை. பரராசசிங்கம்-சிவானந்தன் [சிவம்]

திதி: 1988. 9. 29

எம்வாழ்வில் குறைகண்டோ எம்மைவிட்டு ஓடிவிட்டாய்
உம்மோடு நாம் வாழ்ந்து உம்மீது குறை கண்டதில்லை
சொத்தாக நான்கு செல்வம் கொள்ளாய் விதைத்துவிட்டு
பித்தாகக் கரைத்துவிட்டாய் பிரிந்து விட்டாய் எம்மைவிட்டு
அப்பா என்று அழைப்பதற்கு அன்போடு அழைப்பதற்கு
ஆறுதலாய்க கதைப்பதற்கு இவ்வுலகில்
இனி எமக்கு இருக்கிற தெய்வமேது?
ஆசையுடன் உனை எண்ணும் அயலவர்கள்
அழுகையுடன் பரிதவிக்கும் பெற்றோர் சகோதரர்கள்
பாசமுடன் பரிதவிக்கும் நின் மனைவி, பிள்ளைகள்
நால்வரின் ஏக்கங்கள் என்று தான தணியுமப்பா?
மலர்சாற்றித் தினம் துதித்து வருகின்றோம் ஆண்டவனை
இமையாத விழிகளுடன் எம்மைக் காணிக்கையாக்குகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனன், உறவினர்கள்.

வட்டக்கச்சி,
கட்சன் றோட்,
கிளிநொச்சி.

(6638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 ஆம் நூற்றாண்டு

## விஞ்ஞான விருத்திக்கு மாணவரை தயாராக்க வேண்டும்

### பேராசிரியர் கணேசலிங்கம் உரை

அச்சுவேலி, செப். 29

21ஆம் நூற்றாண்டு விஞ்ஞான விருத்திக்கு இன்றைய மாணவர்கள் தயார் படுத்தப்பட வேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு கல்விசார் அமைப்புக்களும் ஆசிரியர்களும் முழு மனதுடன் உழைக்க வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கே. கணேசலிங்கம் இவ்வாறு கூறினார்.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் பரிசளிப்பு, கல்லூரி ஸ்தாபகர் நினைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இவர் உரையாற்றினார்.

விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு நா.கணேசபிள்ளை தலைமை வகித்தார்.

பேராசிரியர் கணேசலிங்கம் மேலும் பேசுகையில் "இன்றைய எமது மாணவர் சமுதாயம் 21ஆம் நூற்றாண்டு விஞ்ஞான வருத்திக்கு த தயாராக வேண்டும். அதற்கு மாணவர்களைத் தயார்படுத்தும் பணியில் கல்விசார் அமைப்புக்களும் ஆசிரியர்களும் முழுமனதுடன் உழைக்க வேண்டும்.

உலக விஞ்ஞான அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஏற்புடைய விதத்திலும்— ஈடுகொடுக்கத்தக்கதாகவும் எமது மாணவர் சமுதாயம் தயார் படுத்தப்பட வேண்டும்" என்றார்.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் உரையாற்றும் போது, "கல்வியில் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு பெற்றோர், ஆசிரியர் ஒத்துழைப்பும் நல்லுறவும் அவசியமாகும்.

இத்தகைய விழாக்கள் மூலம் அதனை மேலும் வளர்த்துக் கொள்வதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அதனைப் பயன்படுத்த வேண்டும்" என்றார்.

திருமதி புஷ்பா சபாநாயகம் மாணவர்களுக்கான பரிசுகளை வழங்கினார். (ச - 11)

# யாழ்.ஆஸ்பத்திரியிலும் 'டையலிஸிஸ்' பிரிவு

### சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோயாளர் இதனால் பயனடைவர்

கொழும்பு செப் 29

யாழ்ப்பாணம், கண்டி, காலி, ஆகிய இடங்களில உள்ள போதனா ஆஸ்பத்திரிகளில் "டையலிஸிஸ்" பிரிவுகளை உடனடியாக அமைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரிவுகளுக்குத் தேவையான வைத்திய உபகரணங்களைப் பெற அமைச்சு அடுத்த மாதம் கொள்வனவு கட்டளைகளை (ஆர்டர்களை) அனுப்பும்.

இது இவ்வாறிருக்க மாற்று சிறுநீரகம் பொருத்தும் நிலையம் ஒன்றை முதல்முறையாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அடுத்த ஆண்டுஅமைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை நிலையம் எதுவும் தற்போது இயங்கவில்லை.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அமைக்கப்படும் நிலையமே அரசு மருத்துவ மனைகளில் அமைக்கப்படும் முதலாவது நிலையமாக இருக்கும்.

தற்சமயம் கொழும்பு வைத்திய பீடத்துக்கு உரிய மாற்றுச் சிறு நீரகச் சிகிச்சை பிரிவே, தனியார் துறையிலும், உத்தியோகப் பற்றற்ற முறையில் பெரியாஸ்பத்திரியில் உள்ள பல்கலைக் கழக வார்டிலும் மாற்றுச் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறது.

பல்கலைக்கழக வார்டில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகள் ஒவ்வொன்றுக்கும் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் ரூபா வரை கட்டணம் அறவிடப்படுகிறது.

தனியார் மருத்துவ மனைகளில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைக்கு 3 லட்சம் ரூபா வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பரதக்கலை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப் 29

"பரதக்கலை" நூல் வெளியீட்டு விழா இன்று 29 ஆம் திகதி வியாழக் கிழமை யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு. அ.துரைராஜா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் தலைமையில் விழா நடைபெறும்.

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் (இந்து நாகரிகத்துறை) ஆசியுரை வழங்குவார். திரு. இரா. சிவச்சந்திரன் [புவியியற்துறை] வரவேற்புரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் அ துரைராஜா நூலை வெளியிட்டு வைக்க செ. கிருஷ்ணராஜா [வரலாற்றுத் துறை] முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

திருமதி சாந்தினி சிவநேசனின் மாணவர்கள், இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்கள் ஆகியோரின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. (இ-10)

## ஜேனியின் ஆட்களுக்கு கல்தா!

கொழும்பு செப் 29

அண்மைக் காலங்களில் குறிப்பிட்ட சில தொகுதிகளில் இருந்து அரச வங்கிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட சுமார் 150 பேர் அரசியல் காரணங்களுக்காக வேலையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான நியமனங்கள் முன்னாள் நிதியமைச்சர் திரு. ஜேனிடி மெல்லினல் அவர் பதவி விலகுவதற்கு சில காலத்திற்கு முன் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது ஓர் அரசியல் பழிவாங்கல்நடவடிக்கை என விமர்சிக்கப்படுகிறது. (ஒ-3)

### பிறந்தநாள் வாழ்த்து



**சற்குணராஜா நிஷங்கன்**

ஏழாலை மேற்கைச் சேர்ந்த சற்குணராஜா – இரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிஷங்கன் தனது முதலாவது பிறந்தநாளை 29-9-88 இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு மிக்க அப்பாவும், அம்மாவும், அப்பாப்பாவும் அம்மம்மாவும், அப்பம்மா, மாமாமார், மாமிமார், அத்தான்மார், அன்ரமார், சித்தி, அண்ணன்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, ஆசையப்பா, அக்காமார், மச்சாளும், பாட்டியும், மற்றும் உற்றார், உறவினர்களும் நண்பர்களும் ஏழாலை மேற்கு ஞானவைரவரின் அருளினால் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

(6631)


**VACANCIES IN SAUDI ARABIA**

(1) **Electrician**
06 Years Experience 650 SR

(2) **Work Supervisor**
06 Years Experience 900 SR

(3) **Carpenter**
08 Years Experience 650 SR

(4) **Generator Electrician**
06 Years Experience 750 SR

உணவு, தங்குமிடம் இலவசம்

(1) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் Hospital Cleaners — 400 SR

(2) ஏயர்போட் கிளீனர்ஸ் Airport Cleaners — 400+100 SR

(3) கப்பல் துறைமுக வேலையாட்கள் Habour Workers 380 SR

Food, Medical, Accomodation Free


**T.V. TRAVELS&TOURIST**

Brown Road,
Railway Station (Front),
Kokuvil.

(C/ 300)



# உச்ச விளைச்சலை உறுதிப்படுத்துவது மண் பரிசோதனையின் பின் அதற்கேற்ப உரக்கலவை இடுவதே !!




வட மாகாண நெற் பயிர்ச் செய்கையாளருக்கு

**ஓர் நற்செய்தி!!**

**கிளிநொச்சி, மன்னார்**

மாவட்டத்தின் மண் ஆய்வின் முடிவின்படி தனிப்பட்ட உரககலவைகள

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மண்ணின் P. H. 5. 0 முதல் 6 6 வரை அமிலத் தன்மை உடையது எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப உர சிபார்சின்படி அடி உரககலவையில் என. பி. கேயுடன் மக்னீசியம சல்பேற்று சேர்க்கப்பட்ட

# SP: V. MIX (KIL)

**19-9-1988 முதல் கிடைக்கின்றது.**

இவ்வுரத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் பாவித்து

குறைந்த செலவில் அதிகவிளைச்சலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மன்னார் மண் ஆய்வு முடிவு 3-10-1988இலும் அதற்கேற்ப சிபார்சு உரக்கலவை 10-10-1988 இலும்

**SP: V. MIX (MN)** கிடைக்கும் என அறியத்தருகின்றோம்.

மண் பரிசோதனை செய்யாத வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மண்ணிற்கு பொது சிபார்சான

**S.P: V. MIX (N.P)** அடி உரக்கலவை 3-10-1988 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

மண் பரிசோதனை ஆய்வுகூடம்:
**C. C. C. LABORATORY**
(50 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது.)

SP: V. MIX உரக் கலவைகள் தயாரிப்பவர்கள்:
இலங்கை உர யாக்கம்
**Ceylon Fertilizer Corporation**
(இலங்கையின் அதிக கூடுதலான உர விற்பனையாளர்கள்)

இலவச மண் பரிசோதித்து உரக்கலவை சந்தைப்படுத்துபவர்கள்:

**அக்றிகோலாஸ் அன் கொம்பனி**
பழைய டச்சு வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

வவுனியாவில் தொடர்பு கொள்ள:
100, மில் றோட், வவுனியா.

(6629)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைப் பிரதானமாகக் கொண்ட ஐக்கிய தமிழ் முன்னணி வேண்டும்

## உலகத் தமிழ் ஈழ மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப் 29
தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரதான குழுவாகக் கொண்டு சகல அரசியல் இராணுவக் குழுக்களும் ஐக்கிய தமிழ் முன்னணி ஒன்றை ஆரம்பிக்கவேண்டும். இந்த முன்னணி திருத்தியமைக்கப்பட்ட உடன்படிக்கை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் அண்மையில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஈழ மாநாட்டில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

தமிழ் மொழி பேசும் சிறுபான்மையினரின கவலைகள், பிரச்சினைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை பூர்த்தி செய்யும் விதத்தில் இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் மீளமைப்பு செய்யப்படவேண்டும். இந்த அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட உடன்படிக்கை பயனளிக்கும் விதத்தில் 13- ஆவது திருத்தம் மாற்றப்பட வேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக நடைமுறையில் பலவிதமான அரசியற் கருத்துக்களை உடையவர்களும் கலந்து கொள்வதற்கு வசதியாக இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் நீக்கப்படவேண்டும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கும், அறிவிப்பதற்கும் ஏதுவாக சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள் உட்பட இலங்கையின் சகல பகுதிகளுக்கும் கட்டுப்பாடின்றி விஜயம் செய்வதற்கு வசதியாக சர்வதேச பத்திரிகையாளர்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச செஞ்சிலுவைக்கவுன்சில் ஆகியோருக்கும் இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் அனுமதி வழங்கவேண்டும்.

ஏதாவது காரணத்தின் நிமித்தம் சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச பத்திரிகையாளர்கள், சர்வதேச செஞ்சிலுவைக்கவுன்சில் ஆகியோர் இங்கு வருவதற்கு அனுமதிமறுக்கப்படும் பட்சத்தில், அதற்குமாற்று வழியாக ஒரு கௌரவமான சுதந்திரமன்று ஒன்று மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்கு இங்கு அனுமதிக்கப்பட வேண்டும். (அ-ஐ)

### கோப்பாய் சந்தியில்

நேற்றும் நேற்றுமுன் தினமும் கோப்பாய் சந்தியினூடாக சென்றவர்கள் அமைதிப் படையினரால் பகல் 11.00 மணி அளவில் மறிக்கப்பட்டு மாலை 5.00மணியளவில் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனராம்

பிடித்து வைக்கப்பட்டவர்கள் எவ்வெவ் இயக்கங்களுக்குச் சார்பானவர்கள் என வினவப்பட்டு அவர்கள் பிரித்து வைக்கப்பட்டனர்.

### நீர்வேலிப் பகுதியில் தேடுதல்

செவ்வாயன்று நீர்வேலிப்பகுதி அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இதனால் பருத்தித்துறையை நோக்கி செல்லும் வாகனங்கள் யாவும் கோப்பாய் சந்தியில் வழிமறிக்கப்பட்டு உரும்பராய் வீதியினூடு செல்ல விடப்பட்டன. (இ-72)

### கசிப்பு ஒழிப்பு பிரசாரமும் மோதல்களும்

காரைநகர் செப் 29
காரைநகர் ஊரில் நல்லொழுக்க வாலிபர் சங்கம் கசிப்பு ஒழிப்பு பிரசாரத்தை துரிதப்படுத்திய போது மோதல்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

நல்லொழுக்க வாலிபர் சங்கத் தலைவர் தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இதனை அடுத்து இச் சங்கம் மேல் நடவடிக்கைக்காக ஏனைய அயல் கிராமங்களின் உதவியை நாடியிருப்பதாகத் தெரியவருகிறது.

(ச-73)

### நூற்றுக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்

கொடிகாமம், செப் 29
தியாகச்சுடர் திலீபனின் நினைவு வாரத்தையொட்டி கொடிகாமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உண்ணாவிரதத்தில் நூற்றுக்கணக்கான ஆண்கள், தாய்மார், சிறுவர்கள் கலந்துகொண்டனர்? அருள் நிறை காளி கோயிலில் பிரசைகள் குழு, வர்த்தகசபை உறுப்பினர்கள், பொது மக்கள் அநுசரணையுடன் மகத்தான அன்னதானம் நடத்தப்பட்டது.

மந்துவில் சோல அம்மன் கோவிலிலும் உண்ணாவிரதமும் அன்னதானமும் நடைபெற்றன. (இ-75)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு:

## வெளிநாட்டு உதவியுடன் வீடமைப்புத் திட்டம் உருவாக்கக் கோரிக்கை

காங்கேசன்துறை, செப். 29
பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் இருப்பிடங்களை இழந்த விவசாயக்குடும்பங்களைக் குடியமர்த்த வெளிநாட்டு உதவியுடன் வீடமைப்புத்திட்டம் உருவாக்கப் படவேண்டும்.

இப்படியானகோரிக்கையொன்றை மயிலிட்டி வடக்கு கிராமஅபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. எஸ். அருணசலம் விடுத்தார்.

மேற்கு ஜெர்மன் நிறுவனம்வழங்கிய விவசாய உபகரணங்களை மயிலிட்டி வடக்கு விவசாயிகளுக்கு வழங்கிய வைபவம் மயிலிட்டி கலைமகள் பாடசாலையில்நடைபெற்றது.

வைபவத்துக்கு வந்திருந்த மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சு. பாஸ்கரனிடம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் இடம்பெயர்ந்தவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லையென்றும் நிவாரணம்பெற உதவும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

உயர்மட்டத்தில் இது பற்றிப் பேச்சு நடத்த ஆவனசெய்வதாக அவர் உறுதி தெரிவித்தார். (இ-68

## சங்கானையில் திருடர் இருவர் பிடிபட்டனர்

சங்கானை, செப். 29
சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியில் இரண்டு திருடர்கள் கடந்த 24 ஆம் திகதி இரவு 11 30 மணி அளவில் மக்களால் சுற்றிவளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டனர். சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

திருடர்கள் சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியிலுள்ள கார் புரோக்கா ஒருவரின் வீட்டுப் படலையைத் தட்டினர். வேறொரு புரோக்கர் அழைப்பது போன்ற பாணியில் கூப்பிட்டனர்.

சந்தேகமடைந்த வீட்டாரும், அயல்வீட்டாரும் சேர்ந்து, திருடரைச் சுற்றி வளைத்துப் பிடித்தனர்.

பிடிபட்ட திருடர்கள் மக்களினால் விசாரிக்கப்பட்டனர். தாம் உடுவிலில் இருப்பதாகவும், உழவு இயந்திரம், கார் என்பன வைத்திருப்பதாகவும் சங்கானையிலுள்ளோரின் உதவியுடன் திருட வந்ததாகவும் குறிப்பிட்ட வீட்டில் சில தினங்களுக்கு முன்னர் தாமே நாயை வெட்டி விட்டுச் சென்றதாகவும் திருடர்கள் இருவரும் தெரிவித்தனராம்

மக்கள் திருடரிடமிருந்து இருபத்தையாயிரம் ரூபாக்கான மக்கள் வங்கி காசோலையொன்றையும் பறிமுதல் செய்து திருடர்களை நையப்புடைத்து அனுப்பினர்.

01 09 88 ஆம் திகதி எழுதப்பட்ட மன்னார் மக்கள் வங்கிக் காசோலை இதுவாகும். எஸ். நவரத்தினம் என்பவரால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

இக் காசோலையின் உரிமையாளர் சங்கானைப் பகுதி பிரஜைகள் குழுவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார். (இ- 29)

### குருக்கள்கிணற்றடி விநாயகர் ஆலய முன்றலில்

அளவெட்டி, செப் 29
அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய முன்றலில் கடந்த 25 ஆம் திகதியும், 26 ஆம் திகதியும் ஆலய சுற்றுடலில் உள்ளவர்கள் திலீபனின் நினைவாக உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

மௌன அஞ்சலி செலுத்தியதுடன், திலீபன ஆத்மா சாந்தியடையவும் அவர்கள் பிரார்த்தித்தார்கள். (இ-ஐ)

### 'வினசன் வீதி'

கொடிகாமம். செப் 29
சரசாலையில் வீதியொன்று சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சுமார் ஐம்பது பேர் ஒன்றிணைந்து புனரமைத்த இவ் வீதிக்கு 'வின்சன்' வீதி என்ற பெயர் சூட்டப்பட்டது. (ஐ-75)

### "கிளினிக"

சுன்னாகம் தெற்கு காந்திருபன் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலயத்தில் குழந்தைகள் மகப்பேற்று தாய்மார்களுக்கான 'கிளினிக்' நடைபெறுகின்றது. (இ-1

மெய்வல்லுனர் போட்டி

## முல்லைத்தீவு ம. வி. கிண்ணத்தைத் தனதாக்கியது

முல்லைத்தீவு, செப். 29
முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் மூன்று வருடங்கள் தொடர்ந்துசாம்பியனாகி சுழல் கேடயததைத் தனதாக்கிக்கொண்டது

முல்லைத்தீவு மகாவித்தியாலயம் 1984ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து மாவட்டச் சாம்பியனாகி வருகின்றது.

மாவட்ட மெய்வல்லுனர் போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் 389 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், செம்மலை மகா வித்தியாலயம் 155புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், அளம்பில் மகா வித்தியாலயம் 84 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும பெற்றுக்கொண்டன.

பினவருவோர் தனிப்பட்ட வீரர், வீராங்கனைகளுக்கான வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக் கொண்டனர்.

15 வயது ஆண் சி. பிறிமஸ் ஆனநதராசா, முல்லைத்தீவு ம. வி.

15வயதுபெண் ச சுபந்தினி, செம்மலை ம. வி., ம. உமாநந்தினி, அளம்பில் ம. வி, ஞா. யெஸ்மின் மஞ்சுளா, அளம்பில் ம. வி.

17 வயது ஆண் சி.பெ. கொன்ஸ்ரைன், முல்லைத்தீவு ம. வி.

17 வயது பெண் இ. பரிமளாதேவி, முல்லைத்தீவு ம. வி.

19 வயது ஆண் மா. நவரத்தினம், முல்லைத்தீவு ம. வி.

19 வயது பெண் கு. விமலேஸ்வரி, முல்லைத்தீவு ம. வி.

அஞ்சலோட்டத்துக்கான வெற்றிக்கேடயத்தையும் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் தொடர்ந்து 5ஆவது வருடமாகச் சுவீகரித்துக் கொண்டது.

பரிசில்களை முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி சி. இராசரட்ணம் வழங்கினார். (க)

### பரியோவான் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செப் 29
யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அக்டோபர் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணி அளவில் அதிபர் டாக்டர் இ. செ. தேவசகாயம் தலைமையில் நடைபெறும் (இ)

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் வெளிவரும் அறிவிப்புகள் குறித்து சந்தேகம்

கொழும்பு, செப். 29
தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் வடக்கு-கிழக்கு இணைப்பு ஆகியவற்றின் நிச்சயமான தன்மை குறித்து அரசியல் வட்டாரங்களில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது

அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு [illegible] வடக்கு-கிழக்கு இணைப்பை அறிவித்திருந்தார். இன்னும் பல சலுகைகளையும் அவர் அறிவிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டு வரும் இந்தச் சலுகைகள் யாவும் அவசரகால பிரமாணங்களின் கீழ் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களை பாவித்து ஜனாதிபதியால் வெளியிடப்படும் அறிவிப்புக்கள் ஆகும்.

எனவே இவை யாவும் அவசரகாலச்சட்டம் அமுலில் உள்ள காலத்தில் மட்டுமே செல்லுபடியாகும் எனக் கூறப்படுகிறது. (இ-3)

### சேத்துப்பிடிச்சி வீதியின் நிலை

சங்கானை, செப் 29
சங்கானையையும், சண்டிலிப்பாயையும் இணைக்கும் சேத்துப்பிடிச்சிவீதி, பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

வெள்ளநீர் தேங்கி [illegible] பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகிறது (இ-29)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சந்திரதாசன் ராதாதேவி

தோற்றம்: 10 - 7 - 1957    மறைவு: 14 - 10 - 1984

திதி: 29 - 9 - 1988

எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டீர்! மாய்சத உமது நினைவால் மனம் நொந்து வாழ்கின்றோம். உமது அருமை முகத்தை எம்மால காண முடியாதென எண்ணும் போது எங்கள் இதயம் வெதும்புகிறதே! உமது ஆத்மா சாந்தியடைய நான்காவது திதி நாளாகிய இன்று இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி அஞ்சலி செய்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மகள் லமிந்தா,
ஐயா, அம்மா,
பெரியத்தான், பெரியக்கா, பிள்ளைகள்,
சின்னத்தான், சின்னக்கா, பிள்ளைகள்,
தம்பிமார், ரகு, சிறி, மனோ, பாஸ்,
உற்றார், உறவினர்.

புங்குடுதீவு-3.    (6824)

## முதலாண்டு நினைவு நாள்

தியாக தீபங்களே! விடுதலை வித்துக்களே!!



சுப்பையா பாலமோகன்



சுப்பையா விஷ்ணுமோகன்

ஈசன் படைப்பு:- 17.01.1967    ஈசன்படைப்பு:- 04.08.1968
ஈசன் அழைப்பு:- 28.02.1987    ஈசன் அழைப்பு:- 11.10.1987

திதி:- 29.09.1988

காற்றோடு குரல் கலந்ததடா!
கண்மூடி உயிர் பறந்ததடா!
ஏற்றிய தியாக தீபங்களோ
சாற்றுதடா புகழ் தரணியெலாம்!
சிந்துகிறோம் கண்ணீரை மைந்தர்களே - நீங்கள்
எம்மையெல்லாம் தரணியிலே விட்டகலும் விதியா?
உங்கள் நினைவை நெஞ்சிலே அமைத்துவிட்டோம்
நித்தமும் நாங்கள் துடிக்கின்றோம் உம்மையெண்ணி.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் பிரிவால் வாடும்

மைத்துனர்: கா. சிவஞானசுந்தரம்
சகோதரி: சி. விமலினி,
மருமக்கள்: சி. பிரவீணு - பிரதீபா.
"மோகன தீபம்"
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

அன்னை: சு. செல்லம்மா,
சகோதரி: சு. சுகந்தினி,
உறவினர்கள், நண்பர்கள்.
சம்பனை,
தெல்லிப்பழை.

(6841)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 - 04 - 1922

அநியாய அழிப்பு: 11 - 10 - 1987

திதி: 29-09-1988

கோப்பாய் சு. சிவசிதம்பரம்
(ஓய்வு பெற்ற அதிபர் அவர்கள்)
நீண்ட துயில் கொண்டு
ஆண்டு ஒன்றாயினும்
தூண்டா மணிச்சுடராய்
ஒளிர்கின்றீர் எம்முன்னே
கூண்டைப் பிரிந்த
உந்தன் ஆத்மா சாந்தி பெற
வேண்டித் துதிக்கின்றோம்
ஆண்டவன் தன் திருப்பாதம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சிவ-சுகம்'
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.    (6834)

## முதலாண்டு நினைவஞ்சலி



திரு. கணபதி கதிரமலை

தோற்றம்: 26 - 8 - 1939    மறைவு: 30 - 9 - 1987

திதி: 29 - 9 - 1988

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் போனாலும் உம் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது ஐயா! தெய்வமாய் நின்று எமக்கருளும் - ஐயா.
அகால மரணமடைந்த உம் பிரிவால் வாடும்:

மனைவி பூமணி
பிள்ளைகள்.

நி. வி. யூ. ரோட்,
நம்பர்: 100,
திருகோணமலை.    (6612)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

**குறள்:**

என்னைமுன் நில்லன்மின்
தெவ்விர் பலர் என்னை
முன்நின்று கல்நின் றவர்.

**பொருள்:**

பகைவரே! என்னுடைய தலைவன் முன் எதிர்த்து நிற்காதீர்கள்; என்னுடைய தலைவன் முன் எதிர்தது மடிந்து கல்வடிவாய் நின்றவர் பலர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல - 292/2 நாவலர் வீதி தொலைபேசி 24805
32073
யாழ்ப்பாணம்
29-09-1988 ● வெ. இல: 23


## போதை வஸ்து ஆபத்து

ஹெரோயின் போதைவஸ்துவுக்கு அடிமையான எட்டுப்பேர், யாழ். மாவட்டத்தில் அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பது செய்தி.

போதைவஸ்து பாவித்துப் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்கு வந்திருப்போர் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், சிகிச்சை பெற வராமல் மறைத்து வைத்திருப்போர் இன்னும் பலர் எனக் கொள்ளலாம்.

எப்படியோ போதைவஸ்துப் பாதிப்பு எமது பகுதியில் ஆரம்பித்து விட்டது என்பதற்குக் கட்டியம் கூறப்பட்டு விட்டது. அவற்றின் பாவனை இப்போது சர்வசாதாரணமாகி, தாராளமாகப் பலரால் பாவிக்கப்படுகிறது என்பது வெளிச்சமாகி விட்டது.

தனியார் டாக்டர் ஒருவரிடம் 14 வயது மாணவன் ஒருவனை அவனது தந்தையார் அழைத்துச் சென்றார். நான்கு ஐந்து நாட்களாக அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுகிறான். ஒரே நித்திரையும் கொள்ளுகிறான். கடையில் லேகியம் ஒன்று வாங்கிச் சாப்பிட்டதாக அறிகிறோம் என்று தந்தையார் டாக்டரிடம் சொன்னார். டாக்டர் அனுமானித்தது சரியாகிவிட்டது. அந்த லேகியத்தில் இனனென்றுவாகிவருமாறு கூறினார். அதுகைக்கு வந்ததும் லேகியம் அல்ல; லேகியம் என்ற பெயரில பயங்கர பாதிப்பை உண்டாககக்கூடிய போதைப் பொருள் உருண்டை என்பதைப் புரிந்து கொள்வதற்கு டாக்டருக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

இனிப்பு வாங்குவது போல மூலை முடுக்கெல்லாம் தாராளமாக வாங்கக்கூடிய அளவுக்குப் போதைப்பொருள் எமது இளைஞர் பத்தியில் சாதாரண 'பாவனைப்பொருளாகி' வருகிறது வேதனைக்குரியது; பெரும் கொடுமை செய்ய வல்லது.

மேற்கு நாடுகளைப் படுத்தாத பாடு படுத்தி, கலுப்பி சமூகப் பாதிப்பை உண்டு பண்ணிய போதைவஸ்துப் பாவனை, இப்போது எங்கள் சமூகத்தை எச்சரித்து நிற்கிறது.

சமூக அமைப்பை, பண்பாட்டை, சமூக மதிப்பை எல்லாம் தலைகீழாக்கிவிடவல்லது போதைப் பொருள்.

இந்த வாரம்கூட, சர்வதேச அரங்கில், கனடா நாட்டுக்கு அவமானம் வாங்கிக் கொடுத்தது போதைவஸ்துதான். சியோலில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் உலக அதிவேக ஓட்டவீரர் என்ற பெயரையும் தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்த பென் ஜோன்ஸன் போதைவஸ்துப் பாவித்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டு பதக்கம் பறிக்கப்பட்டுப் பட்டமும் களையப்பட்டு உலக விளையாட்டரங்கில் வெட்கித் தலைகுனியவேண்டியதாயிற்று. போட்டியில் கலந்துகொள்வதற்கு முன்னர் தசைநார்களுக்கு உரமூட்டக்கூடிய போதைவஸ்து ஒன்றை உட்கொண்டார் என்பது நிரூபிக்கப்பட்டது. தென் ஆபிரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவராஆனலும் கனடாவில் இப்போது வசிப்பதால் அந்த நாட்டுக்கும் பெரும் அபகீர்த்தியைத் தேடிக்கொடுத்திருக்கிறார்.

போதை வஸ்துவுக்கு எங்கள் இளைஞர் சமூகம் முற்றாக அடிமையாவதற்கு முன்னர் தடுப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

உரிமைக்காகப் போராடும் ஓர் இனத்தின் இளைஞர்கள் போதைவஸ்துவுக்கு அடிமையாகிவிட்டால் அதன விளைவுகளை நினைக்கவும் நெஞ்சு கனக்கிறது; இதயம் பதறுகிறது. இலட்சியங்கள், அபிலாஷைகளை அடைவதற்கு முன்னர் எமது இளைஞர்கள் சமுதாயம் சீரழிந்து, கட்டுக்கோப்பில்லாத சமுதாயமாகிவிடும்.

வெள்ளம் வருவதற்கு முன் அணை கட்டிவிடவேண்டும். இல்லையேல் ஊரே அழிந்துவிடும் அல்லவா? தண்ணீர் தலைக்குமேல் போனபிறகு சாணென்ன முழமென்ன என்ற நிலைக்கு வரும்வரை அனுமதிக்கக்கூடாது.

எனவே போதைவஸ்து ஒழிப்பு இயக்கம் உடனடியாகப் பெரிய அளவில் ஆரம்பிக்கப்படவேண்டும். அதில் அரசாங்க ஸ்தாபனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், சமூகநல இயக்கங்கள், கிராமமட்ட பொதுஸ்தாபனங்கள் ஒன்றுசேர்ந்து செயலாற்றவேண்டும்.

போதைவஸ்து உள்ளே வராமல் தடுத்தல், அப்படிக் கொண்டுவருவோரைத் தண்டித்தல், பிரசாரம், தடுப்பு நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்தல் என்று வகுத்து, ஒவ்வொரு பொறுப்பு ஒவ்வொரு சாராரிடம் கையளிக்கப்படவேண்டும். ஒவ்வொருதரப்பிலும் தீவிர செயற்பாடு தேவை. இதை ஒருசேவையாகச் செய்ய ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

## பதவி துறக்கமாட்டேன்; துருக்கி பிரதமர் அறிவிப்பு

அங்காரா, செப். 28

சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றில் துருக்கி அரசு தோல்வி அடைந்தது.

இருந்தாலும் தான் பதவி விலகப் போவது இல்லை என்று பிரதமர் ஓசால் நேற்று அறிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது சம்பந்தமாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்குமக்களின் கருத்தை அறிய நேற்று துருக்கியில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது.

அதில் அரசு தோல்வி கண்டது. (எ)

## பர்மாத் தேர்தலில் எதிரணி பங்குபற்றும்

ரங்கூன், செப் 28

பர்மாவில் இராணுவ ஆட்சியினர் நடத்தப் போவதாக அறிவித்திருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பங்குகொள்ளப் போவதாக பிரதான எதிர்க்கட்சி அணி ஒன்று அறிவித்து உள்ளது.

இந்த எதிர்க்கட்சி அணி நிபந்தனை எதையும் ஆட்சியாளருக்கு விதித்திருக்கின்றதா? என்பது பற்றித் தகவல் எதுவும் இல்லை என்று பி.பி.சி அறிவித்தது. (எ)

## பலஸ்தீனியர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தீவிரமாகும்

### இஸ்ரவேல் இராணுவம் அறிவிப்பு

ஜெருசலம், செப் 28

கைப்பற்றப்பட்ட பலஸ்தீனியர்களின் தாயகம் மீட்கும் கிளர்ச்சியை அடக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் என்று இஸ்ரவேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது பலஸ்தீனியர்களுக்கு ஏற்படும் காயம், உயிரிழப்புக்கள் குறித்து கவலைப்படப்போவது இல்லை என்றும் இராணுவத்தின் தளபதி தெரிவித்தார்.

நேற்று காஸா பகுதியில் இராணுவம் சுட்டதில் பிளாஸ்டிக் குண்டு பாய்ந்து மூன்று பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேலினல் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களை மீட்க பலஸ்தீனியர்கள் கடந்த டிசம்பரில் தாயகம் மீட்கும் கிளர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்தனர்.

இதுவரை நூற்றுக்கணக்கான பலஸ்தீனியர்கள் இஸ்ரவேல் இராணுவம் சுட்டு உயிரிழந்தனர். (எ)

வெளி உலகில்

## மாகாண அரசுக் கலைப்பு கோரிக்கை பாக். பதில் அதிபர் நிராகரிப்பு

இஸ்லாமபாத் செப் 28

மாகாண அரசாங்கங்களையும் மத்திய அமைச்சரவையையும் கலைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த வேண்டுகோளை பாகிஸ்தான் பதில் அதிபர் குலாம் இஷாக்கான் நிராகரித்தார்.

இதனிடையில் பாகிஸ்தான் பத்திரிகை ஆசிரியர்களைப் பதில் அதிபர் சந்தித்தார்.

"நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் குழப்பும் நடவடிக்கைகளில அமைச்சர்கள் ஈடுபடுவதை அனுமதிக்க மாட்டேன்'' இப்படி பதில் அதிபர் அப்போது தெரிவித்தார். (எ)

## இரத்த வெறி பிடித்த இளைஞன்

மினசோட்டா, செப் 28

மனித இரத்தம் குடிப்பதற்காக ஒருவரைக் கொலை செய்த 19 வயது இளைஞன் ஒருவனை அமெரிக்காவில் மினசோட்டா நீதி மன்றம் குற்றவாளியாகக் கண்டது.

30 வயதான டொனல்ட்கோஸ் என்பவரைக் கொலைசெய்த பின்னர் அவரின் இரத்தத்தைக் குடித்ததாக ரிமோதி எரிக்ஸன் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

புத்திசுவாதீன மற்ற நிலையில் இக் கொலையைச் செய்ததாக அவன் நீதிமன்றத்தில் தெரிவித்தான்.

தண்டனை விதிப்பது ஒத்திவைக்கப்பட்டது. (எ)

வளைகுடா அமைதி பற்றி

## ஈரான் - ஈராக் நேரடிப் பேச்சு சனி அன்று ஐ.நா.வில் ஆரம்பம்

ஐ. நா, செப். 28

ஈரான், ஈராக் ஆகிய நாடுகளுக்கு இடையேயான அமைதிப் பேச்சுக்கள் மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமை ஐ. நா. தலைமைக்காரியாலயத்தில் ஆரம்பமாகவிருக்கின்றன.

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்கள் ஜெனிவாவில் கடந்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகின.

ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் தலைமையில் நடந்த இப் பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டதைத் தொடர்ந்து, பேச்சுக்கள் முறிவடைந்தன.

அடுத்த சனிக்கிழமை மீண்டும் இருதரப்பினரும் ஐ. நா. தலைமை அலுவலகத்தில் சந்தித்துப் பேசச் சம்மதித்துள்ளனர்.

இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் சனிக்கிழமை நேரடிப் பேச்சுக்களில் ஈடுபடுவர் என்று அறிவிக்கபபடுகிறது (எ)

### பாம்பன் பாலம் திறப்பு விழா!

சென்னை, செப். 26

பிரதமர் ராஜீவ் காந்தி மீண்டும் தமிழகத்துக்கு அடுத்த மாதம் இரண்டாம் திகதி வருகின்றார்.

அன்று அவர் பாம்பன் பாலத்தை திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

அன்று காந்தி ஜெயந்தி ஆகும். (எ)

### காந்தி நாள் அமெரிக்காவில் தேசிய தினம்

காந்திஜி பிறந்த அக்டோபர் 2 ஆம் திகதியை தேசிய தினமாகக் கொண்டாட வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் நேற்று தீர்மானித்தது.

அமெரிக்க அதிபர் றேகனின் அங்கீகாரத்துக்காக இத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (ஒ-எ)

### சோவியத் மறுப்பு

பாகிஸ்தான்பிரதேசத்தின்மீது ஆப்கன் விமானப்படை ஊடுருவல் செய்து தாக்குதல் நடத்தியது என்ற குற்றச்சாட்டைச் சோவியத் யூனியன் நேற்று மறுத்தது. (எ)

### ஆயுள் காலம் முழுவதும் விளையாடத்தடை!

ஒட்டாவா, செப் 28

தங்கப் பதக்கத்தைப் பறிகொடுத்த பென் ஜோண்சன் இனி ஆயுள் காலம் முழுவதும் விளையாட கனடா அரசு தடை விதித்திருக்கிறது.

ஜமேக்காவில் பிறந்த பென் ஜோண்சன் கனடாவில் குடியேறி அதனைத் தாயகமாக ஏற்றுக் கொண்டார்.

போதைவஸ்து பாவித்த பின்னர் 100மீட்டர் ஓட்டப்போட்டியில் கலநது கொண்டது கண்டு பிடிக்கப்பட்டு அவரின் தங்கபதக்கம் பறிக்கப்பட்டது தெரிந்தத. (ஒ-எ)

வடபகுதியில் இயங்காதிருக்கும்

## 3 மக்கள் வங்கிக் கிளைகளை திறப்பது குறித்து ஆராய்வு

### சங்கானை கிளைக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், செப் 29

வடபகுதியைச் சேர்ந்த புங்குடுதீவு சங்கானை, முருங்கன் ஆகிய இடங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளை மீண்டும் திறப்பது குறித்து மக்கள் வங்கி தலைமையலுவலகத்தின் உயரதிகாரிகள் தற்போது இலங்கை கூட்டுப்படை தலைமை அலுவலக அதிகாரிகளுடன பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரஸ்தாப மூன்று கிளைகளும் விரைவில் திறக்கப்படுவதற்கான அறிகுறிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது தெரியவந்திருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமாகாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து மூடப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் புங்குடுதீவு, சங்கானை, முருங்கன் ஆகிய மூன்று கிளைகளுமே இதுவரை திறக்கப்படாமலிருக்கிறது.

சம்பந்தப்பட்ட மூன்று கிளைகளையும் திறப்பதற்கான அனுமதி கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்றதும் முதலில சங்கானைக் கிளை திறக்கப்படும்.

அதனை அடுத்து ஏனைய இரண்டு கிளைகளும் திறக்கப்படும்.

சங்கானைப் பகுதியில் வெளிநாட்டு நாணய வருமானம் அதிகரித்திருப்பதன் காரணமாகவே சங்கானைக் கிளையை முதலில் திறப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட இருககிறது.

இதேவேளையில் பணக்கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறாத மக்கள் வங்கியின கிளைகளில் விரைவில் அவற்றை ஆரம்பிப்பதற்கான நடவடிககைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-ஐ)

### கொலையுண்டவர் நீதிபதியின் மாமியார்

கொழும்பு, செப்.29

கொழும்பில் கடந்த சனிக்கிழமை இரவு கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 75வயது மூதாட்டி ராஜேஸ்வரி சரவணமுத்து, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு பி. இராமநாதனின் மாமியார் என்று அறிவிக்கப்படுகிறது.

பம்பலப்பிட்டி, மெல்போர்ன் அவனியூவில் உள்ள அவரின் வீட்டில் அவர் தனிமையில் வசித்து வந்தார் என்று கூறப்பட்டது. (ஓ-எ)

## மாற்றுக் கருத்துக்களை ஏற்காவிடினும் அவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும்

### பவளவிழாவில் அடிகளார் பேச்சு

சாவகச்சேரி, செப். 29

ஜனநாயகக் கோட்பாட்டின்படி ஒருவர் மாற்றுக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாவிடினும் அவற்றுக்குரிய மதிப்பளிக்கத் தவறக்கூடாது.

வதிரி திரு இருதயக் கல்லூரி இரண்டாம் நாள் பவளவிழா நிகழ்ச்சியின்போது அருட் திரு. கலாநிதி ச. ம. செல்வரத்தினம் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. வின்சன் தலைமையில நடைபெற்ற இவ்வைபவத்தில் கலாநிதி செல்வரத்தினம் அடிகளார் தொடர்ந்து பேசியதாவது:

"இன்று நான்குநோக்[illegible]

[illegible]

தமது பிள்ளைகள் பொறியியலாளராக, வைத்திய கலாநிதிகளாக, சட்டத்தரணிகளாக, கணக்காளராக சமுதாயவாழ்வில் மிளிர வேண்டும் என்பது பெற்றோர்களின் அபிலாஷை ஆகும்.

இந்த அபிலாஷைமாணவர் உள்ளங்களிலும் பிரதிபலிக்கத் தவறுவதில்லை.

இந்த அணுகுமுறை தவறானது மட்டுமன்றி அடிப்படைக் கல்விக் கோட்பாடுகளுக்கே முரணானதாகும்.

எமது பாடசாலைகள் ஓர் இனத்துக்குத் தலைமைத்துவம் வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன் மாணவருக்குக் கல்வி புகட்டிக்க வேண்டும்.

சில வெளிநாடுகளிலுள்ள தமிழர் கல்வி வசதியும் வாழ்க்கை வசதிகளும் பெற்றிருந்த போதிலும் ஓர் இலட்சியத்திற்காக உழைக்கும் ஒற்றுமை உணர்ச்சியோ ஒருமைப்பாடோ அவர்களிடம் இல்லை".

—இப்படி அவர் கூறினார்.

அருள்திரு சகோதரர் எஸ் ஏ ஞானப்பிரகாசம் விழாவில பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுது "ஆரம்பகால கத்தோலிக்க குருமார் பல இடர்ப்பாடுகளின் மத்தியிலும் பாடசாலைகளைக் கட்டி இன்றைய கல்வி விருத்திக்கு அத்திவாரமிட்டனர்" என்றார். (ச 70)

### ரூ. 2,000 பெற விண்ணப்பபடிவம் தயார நிலையில்

அண்மைய கால அசம்பாவிதங்களினல் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட உள்ள 2 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப் பப்படிவங்கள் யாழ். செயலகத்தில் விநியோகிக்கத் தயாராக உள்ளது.

இந்த விண்ணப்பப் படிவங்கள் அடுத்த சில தினங்களில் அந்தந்தப் பகுதி கிராம சேவகர்களினல் விநியோகிக்கப்படும்.

இந்த விண்ணப்பப்படிவத்தினைப் பெற குறிப்பிட்ட சிறுதொகைப் பணம் செலுத்த வேண்டியிருக்கும். ஆயினும் அது எவ்வளவு என இன்னமும் கணக்கிடப்படவில்லை என செயலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## ஆசிரியர் கருத்தரங்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 29

வாழ்க்கைத் திறன் கல்வி தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு முதலாம் கட்டமாக செவ்வாய்க்கிழமை மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமானது.

இந்தக் கருத்தரங்கை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் செவ்வாய்காலை9 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பில் பயிற்சி பெற்ற 20 ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கை நடத்துகின்றனர்.

கருத்தரங்கு அக்டோபர் 2 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

இரண்டாம்கட்டகருத்தரங்கு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-ச]

### இராமநாதன்கல்லூரி விடுதி ஆரம்பம

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மூடப்பட்டிருந்த உடுவில் இராமநாதன் கல்லூரி விடுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அக் கல்லூரி அதிபர் திருமதி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

விடுதியில் தங்கிக் கல்வி பயில விரும்பும் மாணவிகள் பற்றிய விவரத்தைத் தமக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு அவர் பெற்றோர்களைக் கேட்டுள்ளார். (ச-90)

### சிற்றாலய விழா

யாழ் அரசினர் வைத்தியசாலை ஆரோக்கிய அன்னை (வேளாங்கண்ணி) சிற்றாலய விழா இன்று 29 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

தினமும் மாலை 5 மணிக்கு ஆராதனைகள் நடைபெறும்.

அக்டோபர் முதலாம் திகதி நோயாளர் தினமாக அனுசரிக்கப்படும். இத்தினத்தில் விசேஷ ஆராதனைகளும் நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெறும்.

அக்டோபர் இரண்டாம் திகதி மாலை 5 மணிக்கு திருநாட் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் (இ 5)

### மாகாணசபை உறுப்பினர் சுட்டுக் கொலை!

மேற்கு மாகாண சபையின உறுப்பினர்களில் ஒருவரான வீரசேன பிற்பகல செவ்வாயன்று அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

அவர் வீட்டிலிருந்த சமயம் அங்கு வந்த துப்பாக்கி இளைஞர்கள் அவரை வீட்டுப் பூந்தோட்டத்துக்கு இழுத்து வந்து சுட்டார்கள் என அறிவிக்கப்பட்டது. (அ)

அடகு நகை:

### சுற்று நிருபம் இதுவரை இல்லை

வடமாகாணத்தில் மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகளை அடகு வைத்தவர்களுக்கு அரசாங்கம் வழங்கியதாக அறிவிக்கப்பட்ட சலுகைகள் அடங்கிய சுற்று நிருபம் இதுவரை மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய அலுவலகத்துக்கு இதுவரை வந்து சேரவில்லை.

சம்பந்தப்பட்ட சுற்று நிருபத்தை உடனடியாக இங்கு அனுப்பிவைக்கும்படி மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய அலுவலகம், மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தைக் கேட்டிருக்கிறது.

இந்தச் சுற்று நிருபம் கிடைத்தவுடன் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் நகை அடகு வைத்தவர்களுக்கு வழங்கப்படும். (ஓ-ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருமண வைபவத்திற்கேற்ற

✶ மணிப்பூரி
✶ காஞ்சிபுர ✶ பெனரஸ்

சேலைகளைப் பெற்றுக்கொள்ள

**மயூரா சென்ரர்**

13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.



# உதயன்

29 - 09 - 1988 வியாழக்கிழமை



✶ சேட்டிங்ஸ் ✶ சூட்டிங்ஸ்

✶ குழந்தைகளுக்கான ஆடைகள் சகலவிதமான

✶ றெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த இடம்

**மயூரா சென்ரர்**

13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.


## முதலாவது பிறந்த தின வாழ்த்து



### செல்வி குணேந்திரன் பிறிந்துஷா

திரு திருமதி குணேந்திரன் மீனலோஜினி தம்பதிகளின் மகள் பிறிந்துஷா தனது முதலாவது பிறந்தநாளை 29 9 88இல் தனது பெற்றோர், அன்பு அக்காவுடன் மேற்கு ஜேர்மன் பிரீமன் நகரில் இருக்கும் வில்சடபேர்க வீதி நம்பர் 1இல் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, அன்பு பிந்துஅக்கா, அதே இடத்தில் வசிக்கும அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, அனுசுயன் அண்ணா, சின்னமாமி, குட்டிமாமா, (பாஸ்), ஆசமாமா (பகீர்), கண்ணமாமா (சங்கர்), சலூதி மாமா முரளி கனடா பெரியப்பா, பெரியம்மா, கண்ணன் அண்ணா, பிரியா அக்கா, விஜயாசித்தா, சித்தி, தேவாசித்தா, கொட்டாஞ்சேனை பெரியப்பா, பெரியம்மா, துவாரகா அக்கா, தம்பி, பெரியமாமா, பெரியமாமி, மச்சாள் நிரோவும், சலூதி பெரியப்பா, நல்லூர் பெரியம்மா, அச்சாமார், பிரியா, அனு, சுதன் அண்ணா, நல்லூர் அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்திமார், மாமி, அப்பம்மா பத்மிமாமி, சிந்துமாமி, அருள், சிங்கப்பூர் பெரியப்பப்பா, ஊரெழு பெரியம்மம்மா, சின்ன அப்பப்பா, சின்ன அம்மம்மா, மயூரன் மாமா, லண்டன் பெரிய மாமா, மிம்மி மச்சாள், சித்தப்பா, சித்தி, கொங்கொங் சித்தி, மற்றும் பிறிமனில் இருக்கும் இளந்திரையன் மாமா, இளஞ்செழியன் மாமா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லாசியுடனும், சலைமகள், அலைமகள் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

(6634)


**PERSONAL CLASSES For PHYSICS**

ஆசிரியர்:

**R. சத்தியசீலன்**

இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம், - யாழ்ப்பாணம்.

**A/L 89 Day Classes**
(திங்கள் தொடக்கம் வெள்ளி வரை)

BATCH I 9-00 — 10-15 a m ஓட்டமின்னியல்
BATCH II 1-30 — 2-45 p m சடப்பொருளின் இயல்புகள்

**AL 89** சனி, ஞாயிறு வகுப்புகள்

SAT — SUN 4-30 p m ஒளியியல் (மீட்டல்)
SAT — SUN 5-30 p. m. வெப்பவியல்
TUE—THU 2-45 P m நிலைமின்னியல்
TUE—THU 3-45 p. m பொறியியல்

**AL 90** அளவீடுகள்
Wed — Fri 3-15 p m
ஒளியியல்
Mon—Wed—Fri 4-15p m

✶ வகுப்புக்கள் நடைபெறுகின்றன ✶

(C/320)



எமது நேற்றைய வெளியீடுகள் !

1. **மாப்பிள்ளை சார்**
[ தரமான பிரதி ]
[ விசு, மோகன், ரேகா ]

2. **நல்லவன்**
( தரமான பிரதி )
[ விஜயகாந்த், ராதிகா ]

**வீடியோ பிரசாத்**

52, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி,
(6639) யாழ்ப்பாணம்.


## யாழ்.எஸ்.பி.யாக சற்குணராஜா நியமனம்

யாழ். மாவட்டத்திற்கு புதிய பொலீஸ் அதிபராக திரு கே சற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் யாழ். மாவட்ட பொலீஸ் அதிபராகப் பதவி வகித்த திரு பொ இராஜேஸ்வரன் கடந்த ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே

இதனை அடுத்து இப்பதவி காலியாகவே இருந்தது இந்தப் பதவிக்கான அலுவல்களை யாழ் மாவட்ட தவிப் பொலீஸ் அதிபர் திரு. சந்தசாமியே தற்காலிகமாக கவனித்து வந்தார்.

ஆனால் தற்பொழுது நிரந்தரமாக திரு சற்குணராஜா நியமிக்கப்பட்டு உள்ளார்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி யாழ் கோட்டையில் உள்ள அலுவலகத்தில் இவர் தமது கடமையைப் பொறுப்பேற்க உள்ளார் என அறியவருகிறது

(ஓ- -9)

## மதுரை.,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேறுசில இந்தியரும் இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய காவல் துறை அதிகாரி ஒருவர் ஜூனியர் விகடன் இதழுக்கு அளித்த பேட்டியில் -

''இது ஒரு முழு கூட்டு நடவடிக்கை. இலங்கை போராளிகள் சிலரும், தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாத இயக்கத்தினரும், சில உள்ளூர் நபர்களுமாக மூவரு பிரிவாகச் சேர்ந்து நடத்திய கொள்ளை இது- என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிடிபட்டவர்கள் ரெலோ இயக்கத் தலைவர் சிறிசபாரத்தினம் உயிரோடு இருந்தபோது அந்த இயக்கத்தில் தீவிரமாய் இருந்தவர்கள் என்று தெரிய வருகிறது. ஆனால் இப்போது அந்த இயக்கத்தை இதில் சம்பந்தப்படுத்த முடியாது- என்றும் அவர் கூறினார்.

## வடக்கு கிழக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மும் அவாவும் ஆகும்.

அதேபோல ஜே வி.பி யுடனும் நான் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவே இருக்கிறேன். ஜே.வி.பி.யினர் பேச்சுவார்த்தைக்கு தயார் என்றால் அவர்களின் பாதுகாப்புக்கும் நான் பொறுப்பாக இருப்பேன்.

இவ்வாறு அவர் கூறினார்

இந்திய அமைதிப் படை இலங்கையில் தங்கியிருப்பது குறித்து அங்கு கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் சொன்னதாவது:—

ஜனாதிபதி திரு ஜே. ஆர்.ஜெயவர்த்தனவின் அழைப்பின் பேரிலேயே அமைதிப்படையினர் எமது நாட்டுக்கு வந்தார்கள்.

வடக்கு,கிழக்கு சகஜ நிலையை ஏற்படுத்தும் நோக்கிலேயே அவர்கள் அங்கிருக்கிறார்கள்.

சகஜ நிலையை ஏற்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது குறிப்பிட்ட அத்துமீறல்களையும் அவர்கள் புரிந்திருக்கிறார்கள். ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரை பற்றி பாராட்டும் வகையிலான கருத்துக்களைக்கூட தமிழ் மக்கள் தெரிவிக்கும் அளவுக்கு இந்தியப்படையின் அத்துமீறல்கள் நடந்துள்ளன.

அவர்களது சேவை தேவைப்படும் காலம் வரைக்குமே இந்திய அமைதிப் படையினர் இங்கு இருப்பார்கள்

வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்ததும் அவர்கள் இந்தியாவுக்கு திருப்பி விடுவார்கள்.

வடக்கு, கிழக்கு இணைப்பு தற்காலிகமானது கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் மூலமே இறுதி முடிவு எடுக்கப்படும்

நான் தனிப்பட்ட ரீதியில் இணைப்புக்கு எதிரானவன். ஏனென்றால் கிழக்கில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் அனேகமாக சம அளவில் வாழ்கிறார்கள் — என்று அவர் கூறினார். (ஓ)

## பட்டப்படிப்புக்காக லண்டன் பயணமானார்



**செல்வன் பங்கிராஸ்யூட்ஸ் வலன்ரைன்**

யாழ்ப்பணம், பாஷையூரைச் சேர்ந்த செல்வன் பங்கிராஸ்யூட்ஸ் வலன்ரைன், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையில் (Electronics Engineering) பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக புலமைப்பரிசில் பெற்று லண்டன் பயணமானார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட 1ஆம் வருட மாணவனும், யாழ்/சப்பத்திரியார் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

(6649)

## தமிழர் பிரச்சினை-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திக்குகளிலும் சிங்கக் கொடி பறப்பதாகவும், 1988 இலங்கை இரண்டாகப் பிரிந்த பாதிரியும் எந்த இடத்திலுமே சிங்கக் கொடி பறக்கவில்லை என்றவாறு காட்டும் விதத்திலும் அச்சிடப்பட்டுள்ளது.

''நாட்டுக்குச் சமாதானமும் உங்களுக்குப் பாதுகாப்பும்'' என்ற அந்த அறிக்கைப் பிரசுரத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

★ இந்த நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களும் எந்த நேரமும் அச்சம், பயம், பீதியுடன் எவ்வித பாதுகாப்புமின்றி வாழுகின்றனர்.

அதேவேளையில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், எம் பிக்கள், கவர்னர்கள், முதலமைச்சர்கள் ஆகியோருக்கும் மற்றும் குறிப்பிட்ட சிலருக்கும் அதிக செலவுசெய்து பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

★ நமது நாட்டில் பல்வேறுபட்ட சமூகப் பிரிவுகளுக்குக்கிடையில் நல்லெண்ணம், நட்புறவு நம்பிக்கை போன்றவை பாதிக்கப்பட்டு கிளர்ச்சிகளும், படுகொலைகளும் நீண்ட நாட்களாக இடம்பெற்று வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

★ மக்களின் நாளாந்த வாழ்க்கை நிலையை உயர்த்தி எல்லா மக்களுக்கும் ஓர் உயர்தர வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்பி எவ்வித குறைபாடுகளுமின்றி நீதி நியாயம் சமதர்மம் எக்காலத்திலும் நம் சமூகத்தில் வேரூன்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ நமது பாரம்பரிய சமய, சமூக, கலாசார பண்பாடுகளை கௌரவித்துப் பாதுகாக்க வேண்டும் எனவே தான் இந்தப் பயங்கர நிலையையும், துயரங்களையும், நிவர்த்தி செய்து மீண்டும் இலங்கையை சுதந்திரமும் ஒற்றுமையும் உள்ள தேசிய உரிமைகளைப் பெற்ற ஒரு ஜனநாயக நாடாக மாற்றுவதே என்னுடைய தீவிரமான விடா முயற்சியாகும்.

★ இந்த நாட்டில் சாந்தியும், சமாதானமும் கொண்ட நவயுகத்தை ஏற்படுத்தி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவமான ஒளிமயமான குறிக்கோளைக் கொண்ட புது யுகத்தை ஏற்படுத்துவதற்கு உங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டிக்கொள்கின்றேன். (அ-ஐ)

## பிரேந்திரா..,

லப்பட்டார். அங்கு ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவுடன் சார்க் அமைப்பு நாடுகளின் உச்சி மாநாடு பற்றிப் பேச்சுக்கள் நடத்தினார்.

பின்னர் மாலை மாலைதீவுக்கு அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்

[ஓ-எ]

## தம்மைத் தாமே----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. டிக்ஸிற்றிடம் கேட்டேன்.

அரசின் அனுமதியில்லாமல் இங்கு வரமுடியாது என மறுத்துவிட்டார். ஆனால் திலீபன் இறந்த அன்று திரு. டிக்ஸிற் இங்கு வந்தார். நான் அழைத்த நேரம் அவர் இங்கு வந்திருந்தால் திலீபனின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். அதனால் எமது நிலைமைகளை முற்றாக உணர்ந்த ஒரு தலைவனை- திலீபனை—இழந்து விட்டோம்

ஒவ்வொரு போராளியும் பாதுகாக்கப்பட வேண்டும். எங்கள் ஆட்சியிலே அவர்கள் பங்கெடுக்க வேண்டும். அப்போது தான் பிரச்சினைக்குத் தானாகத் தீர்வுவரும்-

இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-க)

### டில்லியால் வந்த வேதனை

இங்கே நடக்கும் அழிவுகளுக்கெல்லாம் இங்குள்ள அமைதிப்படையினரையும், தூதுவரையும் பிழை சொல்லிப் பயனில்லை. அதற்கு இங்குள்ளவர்கள் காரணமல்லர்: அவர்களைக் கோபிக்கவும் கூடாத,

அங்கே, டில்லியில் தீர்மானம்எடுப்பவர்கள் இங்கே என்ன நடக்கின்றது என்று தெரியாமல் முடிவு எடுத்ததனால் தான் இந்த அழிவுகள் ஏற்பட்டன. அதாவது டில்லியின் தவறினால் இவை நிகழ்ந்து விட்டன.

எமது தலை விதியை டில்லி அங்கிருந்து நிர்ணயிக்கக் கூடாது. அந்த நிலை மாற வேண்டும்.

நாம் எம்மால் ஆளப்படும் அதாவது நம்மை நாமே ஆளும் நிலை ஏற்பட வேண்டும் என்று டில்லிக்கு நான் சொல்லியிருக்கிறேன்.

தமிழ் மக்கள் சிங்கள இனத்தால் ஆளப்படுகின்றவர்கள் என்று நினைக்கின்றவரை —

அவர்கள் பிறர்ளவரதும் தலையீடின்றி தம் [illegible] நிலை வரும் வரை பிரச்சினை [illegible]

## மரண அறிவித்தல்கள்

### திரு. நா. நா. செல்லத்துரை

(இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்)

சாவகச்சேரி கோயில்குடியிருப்பைச் சேர்ந்த இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் திரு. நா. நா. செல்லத்துரை அவர்கள் 27-9-88 அன்று காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியை ரத்தினாவதி செல்லத்துரையின் அன்புக் கணவரும், ஸ்ரீகணநாதன் [Engineer, London] ஸ்ரீகந்தராஜா [Teacher, London] ஸ்ரீபாலகிருஷ்ணன் [Engineer,London] ஸ்ரீறட்ணேஸ்வரன் [Engineer Australia] ஸ்ரீபத்மநாதன் [Engineer,London] ஸ்ரீசண்முகராஜா [Ireland[ ஜெகதாம்பா [M. S C. London] ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்திமாலா, பிறேமாவதி, செல்வமணி, ஈவோன், சுரேந்திரன், சியாமளாதேவி ஆகியோரின் மாமனாரும். கணன், ஜெனன், காயித்திரி, ஸ்ரீதர்சன், தனுசியா, சியாமா, கவிதா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவர்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உறவினர்கள், நண்பர்கள். அனைவரையும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
திருமதி. செல்லத்துரை

(6637)

### திருமதி சிவபாக்கியம் இராஜகோபால்

காலஞ்சென்ற வைத்திலிங்கம் இராஜகோபால் அவர்களின் மனைவி திருமதி சிவபாக்கியம் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் ஜெகதீஸ்வரி, சிவஜோதி, பரம்சோதி, ஞானசோதி, சுயம்சோதி (சாரதா), சிவசங்கரநாதன் (ரூசபாலன்), நவரசதேவி, விஜயதெய்வேந்திரநாதன் (இந்திரன்) அவர்களின் அன்புத் தாயாரும், திருஞானசம்பந்தர் (டாக்டர்), சந்திரப்பிரகாஸ் (பரிஸ்ரர்), திருஞானம் (வியாபாரம்),ஜெயமலர்,காலஞ்சென்ற P. K. பிள்ளை நடராஜா (மிருக வைத்தியர்) ஆகியோரின் மாமியாரும், பிரேம குமாரி, புவனகுமாரி, நந்தகுமார், இந்திராணி, வனஜா, ஞானசேகரம், திலகவதி புனிதவதி, சுபத்திரா, கௌரி, குணசேகரன்,வரதராஜன் ஆகியோரின் அன்புப்பேத்தியும் ஆவார். இவரின் ஈமைக்கிரிகைகள் 02 - 10 - 88 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி-10மணி வரையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

'சாந்தினிநிகேதன்'
6, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்
(6642)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

பூவுலகில் 1935 - 10 - 14



விண்ணுலகில் 1988 - 04 - 24

திதி: 1988 - 09 - 29

புங்குடுதீவு குறிகட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டு புதுக்குடியிருப்பை இறப்பிடமாகக் கொண்ட

### திரு. வைத்திலிங்கம் பரராசசிங்கம் (பரா)

அன்பின் ஐயா! நீங்கள் இல்லாத மனைவி பிள்ளைகளாய் நாம் என்றும் எண்ணவில்லை. ஆயினும் விதி எமக்கு என ஆக்கிவிட்டுச் சென்று விட்டீர்கள். நீங்கள் உள்ளவரை அஞ்சாத நாம் இப்பொழுது அஞ்சி உயிர் வாழுகின்றோம். விலை மதிப்பு ஏதும் இல்லாத சிகரமே எங்கு நீங்கள் சென்று மறைந்துவிட்டீர்கள்? பாரினில் எங்களுக்கு யார் துணையோ? இறைவன் பதில் தருவான்

ஐயாவின ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
உங்கள் பிரிவால் வாடும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.**

கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

(6638)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29- 09- 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd292/2 Navalar Road, Jaffna on Thursday 29th September 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org